REGISTERED No. M. 6165. அணா 2

1285

# பத்ஹுல் இஸ்லாம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 MAR 1955
MADRAS

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

## மார்ச்சு 1955.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| இஸ்லாமிய ஜீவ மரண தத்துவார்த்தம் | 1 |
| ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி) | 9 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 15 |
| காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் (அய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் ஸாஹிப்) | 18 |
| சர் இக்பால் (எஸ். எஸ். அலாவுதீன்) | 23 |
| இரத்தச் சின்னம் (தொடர்கதை) ... ... | 25 |
| நாம் முன்னேற முடியும்! ...லம்பிட்டி வி. பி. எம். அப்துல் ஜப்பார்) | 31 |

...இஸ்லாம் ஆபீஸ் :
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

SCANNED

JL
ஏ.211, N24FI
N55
187040

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–8–0
தனிப் பிரதி அணா. 0–2–0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரு

## ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்.

இப்புஸ்தகத்தில் ஹஸரத் ஸெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (ரஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸெய்யிதினா ஆஷிக் குதா (ரஹ்) அவர்களின் தரிசனம் வாயப் பெற்றதும் அவர்களின் மகத்தான கருமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹறமனி பாத்திஹா"வின் விபரமும் அடங்கியுள்ளன. இதன் விலை அணா. 4

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

மார்ச்சு—1955.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 MAR 1955
MADRAS

## இஸ்லாமிய ஜீவ மரண தத்துவார்த்தம்.

“ஜீவியத்தையும் மரணத்தையும் (அல்லாஹு தஆலா) சிருஷ்டித்ததானது, உங்களில் எவர் நல்லனுஷ்டானத்தால் சிறந்தவர்களாய் இருக்கிறார்கள் என்பதை சோதித் தறிவதற்கே யாகும். மேலும் அவன் மிகவும் மன்னிப்பவனாகவும், சிறப்புத் தருபவனாகவும் இருக்கின்றான்” (குர்ஆன் ஆயத்து).

மாந்தர்களாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் பிறந்து, வளர்ந்து, உண்டு, சுகித்து, உறங்கி, எழுந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலோர் ஜீவியத்தின் கருத்தையோ வாழ்வின் தத்துவத்தையோ சற்றும் உணர்ந்து பார்ப்பதில்லை. வாய்க்கு ருசியான ஆகாரங்களை உண்டு ஜீரணிப்பதையும், அழகான பெண்டிருடன் கூடிக் குலாவி இன்பம் அனுபவிப்பதையும், வீடும் மாளிகையும் கட்டி அலங்கரித்துப் பெருமையடைவதையும், விலையுயர்ந்த மோட்டார் வாகனத்தில் அமர்ந்து சென்று ஆனந்தமாய் இருப்பதையும், பொன்னும் பொருளும் சேமித்து பணக்காரர் என்ற பட்டத்துடன் பிறர் மெச்ச வாழ்வதையும் தவிர்த்து ஜீவிய வாழ்வின் தத்துவம் வேறொன்று மில்லை யென்று கருதிக் கொண்டிருக்கின்றனர்.

‘உலகில் வாழ்வது எதற்கு?’ என்று ஆராய்ச்சி செய்து பார்ப்பவர்களை ஞானிகள் என்று அஞ்ஞானிகள் ஒதுக்கித் தள்ளுகிறார்கள்.

ஆனால் மேனாட்டார், நாம் எதற்காக உயிர் வாழ்கிறோம் என்பதை லோகார்த்தமான ரீதியில் ஆராய்ந்துப்பார்த்து, அதற்கான வழி முறைகளை வகுத்துக் கொண்டு, சிறப்புற வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

## நாம் ஏன் வாழ்கிறோம்?

'நாம் ஏன் வாழ்கிறோம்' என்ற கேள்விக்கு இலேசாக பதில் சொல்லிவிட முடியாது. 'தம்பி, நீ எதற்காக உயிர் வாழ்கிறாய்?' என்று ஒரு சிறுவனை கேட்டுப் பாருங்கள். "எனக்குத் தெரியாது; அம்மாவை கேட்டுச் சொல்கிறேன்" என்று பதில் சொல்வான்.

இதே கேள்வியை அந்த அம்மாவிடம் கேட்டுப் பாருங்கள். "பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, சௌக்கியமாய் வாழ்வதற்குத்தான் நாம் வாழ்கிறோம்" என்று அவளுக்கே புரியாத மாதிரி பதில் சொல்வாள்.

"கனவானே, தாங்கள் ஏன் உலகில் ஜீவியம் நடத்துகிறீர்?" என்று அந்தப் பையனின் அப்பாவை கேட்டுப் பாருங்கள். "என்னுங்க, இதுகூடவா தெரியாது; நாலுபேரைப் போல நாமும் பணங்காசு சேர்த்து, வீடு வாசல்களை சம்பாதித்துக் கொண்டு சௌக்கியமாக வாழ்வதற்காகத் தானே ஜீவிக்கிறோம்" என்று பதில் சொல்லுவார்.

இந்த மூன்று வகை பதில்களும் பாமரத் தன்மையாளர்கள் சர்வ சாதாரணமாக சொல்லும் விடைகளாகும். இதே கேள்வியை 'சைன்ஸ்' படித்தறிந்த விஞ்ஞானியை கேட்டுப் பாருங்கள். "இயற்கைப் பிரகாரம் நாம் உற்பத்தியாகிறோம், இயற்கை நியதிக்கிணங்க நாம் வாழ்கிறோம், இயற்கைப்படியே நாம் ஒரு நாளைக்கு இறந்துப் போவோம். 'ஏன் உயிர் வாழ்கிறோம்' என்றால் 'ஏன் பிறக்கின்றோம்' என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்" என்பான்.

## நாம் ஏன் பிறக்கிறோம்?

நாம் ஏன் பிறக்கின்றோம்? என்பது மகாப் பெரிய கேள்வியாகும். இது ஒரு தீராத பிரச்னையாகும். எளிதில் முடிவு கூற முடியாத மாபெரும் ஆராய்ச்சியுமாகும்.

நாம் ஏன் பிறக்கிறோம் என்பதை, அன்று பிறந்த சின்னஞ்சிறு சிசுவைக் கேட்டு, அது பதில் சொன்னால் தான் அதன் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும். சின்னஞ்சிறு சிசுவுக்கு பேசத் தெரியாதே, இதற்கென்ன செய்வது? ஆயினும் என்ன, அந்தப் பாப்பா, தாய் வயிற்றிலிருந்து நழுவி வெளிப்பட்டு வந்து இப்பூலோக காற்று

18040

உடலில் பட்டதும் "கூவா, கூவா" என்று வீறிட்டுக் கதறி அழுகிறது.

குழந்தை பிறந்ததும் ஏன் அழுகிறதென்று யாரும் அப்போது யோசித்துப் பார்ப்பதில்லை. குழந்தை பிறந்ததும் அழுதால்தான் நல்லது என்று ஆவலுடன் அதன் அழுகைக்குரலை எதிர்பார்த்து கேட்டு இன்ப மடைகிறார்கள்.

ஆனால் அந்தக் குழந்தை ஏன் அழுகிற தென்றால், "அந்தோ! பாபமும் பழியும் நிறைந்த இந்தப் பூலோகத்தில் நாம் பிறந்து விட்டோமே; தாயாரும் தகப்பனாரும் சேர்ந்து நம்மை இப்படி பிறக்க வைத்து விட்டார்களே; இனி எப்படி வாழ்வது? வந்த இடம் எப்படி திரும்பிப் போய் சேர்வது? பிறப்பது நம் இஷ்டத்தில் இல்லாதது போல், இறப்பதும் நம் இஷ்டத்தில் இல்லாது போய் விட்டதே? எத்தனை வருஷங்கள் இந்த தொல்லுலகில் வாழ்க்கைப் போராட்டங்களில் நாம் ஈடுபட்டு உழல வேண்டுமோ தெரிய வில்லையே" என்று பற்பல ஜீவ மரண தத்து வார்த்தங்கள் அடங்கிய ஞானப் பிரலாபமாய் அக்குழந்தை அழுகிறது. இதை அறிவோர் யார்?

## நாம் ஏன் மரித்துப் போகிறோம்?

உலகில் நல்லபடியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மாந்தர் எவரும் "செத்துப் போகலாமா நாம்!" என்று யோசித்துங்கூட பார்ப்பதில்லை. இத்தரணியில் சாகாமல் இருப்பதற்கு என்ன மார்க்கம் இருக்கிறது? என்று ஒவ்வொரு சுகபோகியும் ஆவலுற்றுக் கொண்டுதான் இருக்கிறான்.

கடும் நோயால் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்து மரணவஸ்தை பட்டுக் கொண்டிருப்பவன்கூட, "நீ செத்துப் போக இஷ்டப் படுகிறாயா?" என்று டாக்டர் கேள்வி கேட்டால் என்ன பதில் கூறுவான் தெரியுமா? "ஐயா டாக்டரே, உமக்கு புத்தி இருக்கிறதா, இல்லையா? செத்துப் போக எனக்கு இஷ்டம் இருந்திருந்தால் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்து உம்மிடம் எதற்காக மருந்து தின்ன வேண்டும்? அங்கேயே எங்காவது கிடந்து செத்துப் போய் இருக்க மாட்டேனா" என்றுதானே பதில் சொல்வான்.

## மரணத்தை தடுக்க முடியுமா?

நமக்கு மரணம் வராமல் அதை நாம் தடுத்து நிறுத்திக் கொள்ள முடியுமா? என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறதல்லவா?

நாம் ஜனனமாவதை கட்டுப்படுத்திக் கொள்ள நாம் எப்படி முடியாதவர்களாய் இருக்கிறோமோ அப்படியே, மரணத்தை வராமல் தடுத்துக் கொள்ளவும் நாம் முடியாதவர்களாய் இருக்கிறோம்.

"மாந்தன் சீக்கிரம் செத்துப் போகாதிருக்க ஒரு வழியுண்டு. ஆரோக்கிய வாழ்வு முறைகளை அவன் ஒழுங்காக அனுஷ்டித்து வந்தால், அவன் நீண்ட காலம் உயிர் வாழலாம்" என்று மேனாட்டு உடற் கூற்றுக் கலை வல்லுனர்களாகிய சைன்ஸ் டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் சுயமாக தம் மரணத்தைக்கூட தடுத்து நிறுத்திக் கொள்ளாமல், திடீரென்று 'ஹார்ட்பைல்' என்னும் மாரடைப்பு—மூச்சு நிறுத்தம் ஏற்பட்டு செத்துப் போகிறார்கள்.

## மகாத்மாக்களும் அசக்தர்களே

சைன்ஸ் என்னும் விஞ்ஞானக் கலா வல்லவர்கள்தான் இப்படி வாதாடி வாதாடி, இறுதியில் தம் இஷ்டத்திற்கு மாறாக செத்துப் போகிறார்களென்று கருத வேண்டாம்.

லோக ஆசாபாசங்களின் பற்று கொள்ளாமல், தாமரை இலை தண்ணீர் துளி போல் பற்றற்ற வாழ்க்கை நடத்தும் சன்னியாஸிகளும் துறவிகளும் மகான்களும் மகாத்மாக்களும்கூட திடீரென மரணமென்னும் மர்மப்பிடியினுள் அகப்பட்டு நசித்து செத்து மறைந்துப் போகிறார்கள்.

சுவாசத்தை கட்டுப்படுத்தி, இச்சைகளை ஒடுக்கி, ஆகாரர்திகளை ஒழுங்குப்படுத்தி, மிதமான முறையில், அமைதியான வழியில் வாழ்க்கை நடத்தி வந்தார் ஒரு மகாத்மா. அவர் தூய வாழ்வுதான் வாழ்ந்து வந்தார். "குறைந்தபக்ஷம் 125 ஆண்டுகள் நான் இத்தரணியில் ஜீவித்திருக்கப் போகிறேன்" என்று வைராக்கியம் பேசிக் கொண்டிருந்தார். அதற்கேற்ப வாழ்ந்தும் வந்தார். ஆனால் பாபம், 80 வயதுகூட உலகில் ஜீவித்திருக்கும் பாக்கியம் பெறவில்லை. ஆயிரக் கணக்கான பக்தர்கள் முன்னிலையில், எவனோ ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டு, எதிர்பாராத விதமாய் திடீர் மரண மடைந்தார்.

இச்சம்பவம் எதை நமக்கு அறிவுறுத்துகிறது? பிறப்பதும் இறப்பதும் நம் ஆதிக்கத்தில் இல்லை என்பதைத்தான்.

## படைக்கும் சக்தி எது?

"மனிதன் சுயமாகப் பிறப்பதில்லை; சுயமாக இறப்பதுமில்லை." ஏதோ ஒரு பரம ரகசியமான சக்தியே அவனைப் படைக்கிறது; உலகில் ஜீவித்திருக்கச் செய்கிறது; இறுதியில் மரித்துப் போகும்படிச்

செய்கிறது'' என்ற ஜீவ–மரண தத்துவத்தை, தெய்வம் ஒன்று உண்டு என்பதை நம்பாத நாஸ்திக அவிவேகியும்கூட ஒப்புக் கொண்டுதான் தீருகிறான்.

எனவே, நம்மை தாய் வயிற்றில் உற்பத்தியாக்கி வைத்து, வளர்த்துப் பிண்டமாய் சிசுவாய் வெளிப்பட வைத்து, உலகில் பொழுதொரு வண்ணமும் நாளொரு மேனியும் வளரச் செய்து, நம்மை சம்ரக்ஷித்துக் காத்து வரும் மகா சக்தியே எல்லாம் வல்ல ரப்புல் ஆலமீன் ஆகிய அல்லாஹுதஆலா என்று முஸ்லிம்களாகிய நாம் எல்லோரும் ஈமான் என்னும் நன்னம்பிக்கை கொண்டு உயிர் வாழ்ந்து வருகிறோம்.

இந்த தெய்வ நம்பிக்கையைத்தான் நாஸ்திகர்களும் விஞ்ஞானிகளும், ஏதோ ஒரு மகா சக்தி என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

''எப்பொருள் யார் யார் வாய் கூறினும் அப்
பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்று வள்ளுவர் என்ற பெரிய ஞானி ஒருவர் கூறிப்போயுள்ளார். யார் யார் தெய்வத்தைப் பற்றியும் மகா சக்தியைப் பற்றியும், எப்படி எப்படி கூறி வாதாடிக் கொண்டிருந்தபோதிலும் சரி அதெல்லாம், அல்லாஹ் என்னும் குத்ரத்துடைய வல்லோனையே குறிக்கும் என்பது நம் முஸ்லிம்களுடைய உறுதியான உள்ளக்கிடக்கையும் ஈமானுமாகும்.

## ஜீவ – மரண தத்துவம்

பிறப்பதற்கு முன் நாம் எங்கிருந்தோம், எங்கிருந்து வந்தோம் என்பது நமக்கு ஸ்பஷ்டமாய் விளங்குவதில்லை. அதே போல், நாம் மரித்து இறந்துபோன பிறகும்—நாம் எங்குச் செல்வோம், என்ன ஆவோம் என்பதும் நமக்குத் தெளிவாய் தெரிவதில்லை.

ஆனால் இந்த ஜீவ—மரண தத்துவத்தைப் பற்றி ஆண்டவனுடைய நல்லடியார்களும் திருத்தூதர்களும் மனிதச் சிரேஷ்டர்களுமான நபிமார்கள் சொல்வதை நாம், மனப்பூர்வமாய் நம்பி ஏற்றுக் கொண்டு தான் தீரவேண்டும்.

'நாம் பிறக்கிறோம், நாம் இறக்கிறோம்' என்று சொல்லும் போது நாம் என்று எதைக் குறிப்பிட்டுக் கூறுகிறோம். 'சரீரம் பிறக்கிறது, சரீரம் இறக்கிறது' என்று பொருள் கொள்வதே அக்கூற்றின் கருத்தாகும்.

சரீரமாகிய இந்தப் பிண்டம் பிறப்பதை நாம் பத்து மாதத்துக்குப் பிறகுதான் அறிகிறோம். பத்து மாதத்துக்கு முன் அது எங்கு

இருந்தது என்பதை யார் அறிய வல்லார்! தகப்பனரின் விந்துவிலும், தாயாரின் நாதத்திலும் இந்தப் பெரிய சரீரம் அடங்கியிருந்த தென்று சொல்கிறோமே, இதுவே எவ்வளவு பெரிய ஆச்சரியமான விஷயமாக இருக்கிறது என எண்ணிப் பாருங்கள்.

## ஆலமரத்து வித்தின் மர்மம்

ஒரு சொட்டு விந்துக்குள் ஆயிரக்கணக்கான கிருமிகள் இருக்கின்றனவாம். ஒரு துளி நாதத்தில் அங்ஙனமே ஆயிரக்கணக்கான சினைகள் (முட்டைகள்) இருக்கின்றனவாம். ஒரு கிருமியும் ஒரு சினையும் கூடி ஒன்ருய் இணைந்து கொண்டால், அது கர்ப்பாஸயப் பையில் சிறு சிசுவாகப் பரிணமித்து வளர்ந்துப் பெரிதாய் பத்து மாதத்தில் குழந்தையாய் ஜனிக்கிறதாம். குழந்தை ஆரடி உயரமுள்ள வீரப் புருஷனாகவும், பஹில்வானுகவும் மாறுவதை நாம் பார்க்கிறோம்.

ஆல மரமானது, விருக்ஷ இனங்களில் பிரம்மாண்டமானது. ஒரு மரத்தில் எத்தனையோ கிளைகள் படர்ந்து, ஒரு மகாப் பந்தல் போல் வியாபித்து நிழல் தருவதாகும் ஆலமரம். அந்த கிளைகளிலிருந்து விழுதுகள் தொங்கிப் பூமியில் பதிந்து அதுவும் ஓர் வளர்த் தூண் போல்வளர்ந்து ஆலமரத்தைத் தாங்கி நாலா பக்கமும் வியாபிக்கச்செய்து, மரத்தை பிரம்மாண்டமான தோற்றமுடையதாகச் செய்கிறது.

இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான மரம் (ஆல விருக்ஷம்) எங்கிருந்து தோன்றியது, கடுகிலும் சிறியதான—கசகசா போன்ற ஒரு சிறு நுட்பவித்தி லிருந்தல்லவா அந்த பிரம்மாண்ட ஆலமரம் தோன்றியது. பெரிய கட்டிடங்களையும் பிரம்மாண்ட மாளிகைகளையும் பல மனிதர்கள் சேர்ந்து கட்டி முடித்து விடுகிறுர்கள். அவ்விதமாக ஒரு ஆலமரத்தை செயற்கையாக உண்டாக்கிவிட முடியுமா மனிதர்களால்! இல்லை, இல்லை.

## மனிதன் அசக்தனே

மகாசக்தியால் ஆக்கி வைக்கப்படும் இயற்கைப் பொருள்களில் சிருஷ்டிப்புகளில் மனிதன் மிகவும் அசக்தனுவான். ஆலமரத்தையென்ன, ஒரு சிறு கீரைச் செடியைக்கூட அவன் இயற்கையின் பரம ரகசியமான உதவியின்றி, உற்பத்தி செய்ய முடியவே முடியாது.

பொதுப்படையாய் கூறவேண்டுமானால், மனிதன் ஆளுபவனல்ல; ஆளப்படுபவனே யாவான். சிருஷ்டிப்பவனல்ல; சிருஷ்டிக்கப் படுபவனே யாவான். பிறப்பவனல்ல; பிறப்பிக்கப் படுபவனேயாவான். மரணிப்பவனல்ல; மரணிக்கப் படுபவனேயாவான். எதையும் மனிதன் சுயமே ஆக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது. எனவே, மனிதன் பலஹீனனாவான்; இயற்கைக்கு கட்டுப்பட்டவனாவான். ஆண்டவனால் ஆளப்படுபவனாவான்.

## மனிதன் சிரேஷ்டன்

மனிதனைப் போல்தான், மிருகங்களும் தாவரங்களும் இயற்கை விதியின் பிரகாரம் தெய்வ கட்டளைக் கிணங்கி மகா சக்தியின் வயப்பட்டு உண்டாகின்றன, வியாபிக்கின்றன, அசைந்தாடுகின்றன, ஊர்ந்து சென்று உயிர் வாழ்கின்றன, இறுதியில் செத்தொழிந்து போகின்றன, அல்லது மக்கி மடிந்து மண்ணாகிப் போகின்றன.

ஆனால், மரஞ் செடிகள் உற்பத்தியாகிப் பின் அழிவதிலும், ஆடு மாடு பிறந்து வளர்ந்து செத்துப் போவதிலும், மனிதனின் சீரிய ஜீவ வாழ்வு மகத்தானதாகும். மனிதன் சுய உணர்வும், சுய சக்தியும், பகுத்தறிவும், தன் அடக்கமும் உடையவனாக இருப்பதால் அவன் சிரேஷ்டமானவன். அஷ்ரபுல் மக்லூகாத் (சிருஷ்டிப் பொருட்களி லெல்லாம் சிறந்தவன்) என்று அழைக்கப் படுகிறான்.

## ஜீவன் முக்தி அடைவோம்

இத்துணை தத்துவார்த்தங்களையும் மனிதன் ஆராய்ந்து தெரிந்து கொண்ட பின் மனிதனுக்கு ஒரு கடமை இருக்கிறது. அதுதான் முக்தி மார்க்கமாகிய 'நஜாத்' எனும் ஈடேற்ற சாதனத்தை அடைந்து, இகத்திலும் பரத்திலும் மாந்தன் உய்வதாகும். அதையே ஜீவன் முக்தி என்றும் "லிகா" என்றும் சொல்லுகிறோம்.

இக்கட்டுரைத் தலைப்பில் கண்டுள்ள வேத வாக்கியத்தை மீண்டும் படித்துப் பாருங்கள். மவுத்தையும் ஹயாத்தையும் இறைவன் நமக்களித்த லக்ஷியத்தை ஓர்ந்துப் பாருங்கள். ஜிஸ்மானியத்தில் இருந்து கொண்டே, ரூஹானிய்யத்தை சம்பாதியுங்கள். அது உங்களுடைய அமல் என்னும் அனுஷ்டானத்தையே பொருத்திருக்கிறது. வஸ்ஸலாம்.

# இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு.

## புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப்படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞான மார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்துக்கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்கு வித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்ட திட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத்துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக்கூடியதில்லை. இநத நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

நெடுநாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் தா முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(5-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளல்

# ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## புதுப் புருஷனின் போக்கு

மாவியா, தன்னை விரும்பி அழைத்திருந்த சிற்றப்பன் மகனுன மாலிக் இடம் போய்ச் சேர்ந்து கொண்டாள். இவளை அவன் மனை யாட்டியாக ஏற்றுக்கொண்டான். மாலிக் பெரிய பணக்காரன். சொத்தும் செல்வமும் சாதனங்களும் மிக உடையவன். ஆனல் தாராளமனம் கிடையாது. விருந்தாளிகட்கும் யாத்திரீகர்கட்கும் உபசரிக்கும் நற் குணமில்லாதவன்; தான தருமத்திலும் விருந்தோம்பலிலும் மாலிக், ஹாத்திமுக்கு நேர் எதிரிடையான சுபாவமுடையவன்.

மாலிக் மாவியாவுக்கு வாக்களித்த வண்ணம் மனைவியாக ஏற்றுக் கொண்டான். இருவரும் சிலநாள் மனமொத்து இன்பமாகவே கழித் தனர். உண்பதற்கும் உடுப்பதற்கும் சுகிப்பதற்கும் இவளுக்கு, அவன் ஒரு குறையும் ஏற்படுத்தவில்லை. ஆனல் ஒரு விஷயத்தில் மட்டும் அவன் இவளை கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். அதாவது தன் வீட்டுச் சொத்து-உணவு முதலியவற்றிலிருந்து ஒரு அணுவத்தனையும் தன் சுயேச்சையாக எடுத்து வேறு யாருக்கும் கொடுக்க இவளுக்கு அதிகாரம் கிடையாது.

திடுகூறாய், ஒருநாளிரவு சில யாத்திரிகர்கள் மாவியாவைத் தேடி விருந்தாளிகளாக வந்து சேர்ந்தனர். வந்தவர்களை எங்ஙனம் வரவேற்கா திருக்க முடியும்? மாவியா அவர்களை தன் கூடாரத்திற்கருகில் தனி கூடாரங்களில் அமரச்செய்து விட்டு, உணவுக்கு ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டாள், தன் வேலைக்காரியை (அடிமையை) தன் புதுப்புருஷன் மாலிகிடம் அனுப்பிவைத்து “ஹாத்திமுக்கு அறிமுகமான சில அன் பர்கள் என்னைத் தேடி விருந்தாளிகளாக வந்திருக்கிறார்கள்; அவர்களு டைய உபசரணைக்காக கொஞ்சம் பேரீச்சம்பழமும் பாலும் அனுப்பி வைக்கும்படி சொல்லியனுப்பினள்.

வேலைக்காரி, மாலிக்குடைய கூடாரத்திற்குள் போய், தன் எஜமா னியின் கோரிக்கையைத் தெரிவித்தாள். மாலிக் இதைக்கேட்டு சினந்து பதறி எழுந்தான். ஆத்திரம் பொங்க பொழிந்தான். “என் கூடாரம் சோம்பேறிகளுக்கு சத்திரம் அல்ல; ஹாத்திமுடைய அன்பர்களா யிருந்தால் எனக்கென்ன, என் மனைவியுடைய நேசர்களாய் இருந்தால்

எனக்கென்ன? என்னிடம் பாலும் பேரீத்தமும் மிஞ்சிக்கிடக்கவில்லை; போ; போ'' என்று கடிந்து கூறிவிட்டு, கோபத்தால் தன் தாடியைப் பிய்த்து பிடுங்கிக்கொண்டான்.

வேலைக்காரி திரும்பி வந்து, மாலிக் உடைய கடும் சொற்களையும் செயல்களையும் எடுத்துரைத்தாள். மாவியா இதை யுணர்ந்து மகா மன வேதனையடைந்தாள். வந்த விருந்தினர்கட்கு உணவளித்து உபசரிப்பதை எங்ஙனம் தவிர்க்க முடியும்? மானம் போவதைவிட கொடியதல்லவா விருந்தினரை பட்டினிப் போடுவது?

அபலை மாவியா துணிந்து நேரே தன் புதுப்புருஷனுடைய கூடாரத்திற்கு சென்று வேண்டினாள்.

மாவியா:—அன்பரே! நம் வீட்டை தேடி விருந்தாளிகள் வந்திருக்கின்றனரே, உணவுக்கு வகை செய்து கொடுங்கள்.

மாலிக்:— யாருடைய விருந்தாளிகள்? என்னுடையவர்களல்லவே, உன் பழைய புருஷன் ஹாத்திமுடைய ஆட்களல்லவா? அவர்களை நான் ஏன் உபசரிக்க வேண்டும்?

மாவியா:— வந்த விருந்தினர் யாருடைய ஆட்களாயிருந்தாலென்ன? நம் இல்லத்தை தேடிவந்தவர்கள் நம் அததிகள்தானே. நாம்தான் உணவளிக்க வேண்டும்.

மாலிக் : இந்த வழக்கத்தை நீ இன்னுமா வைத்துக் கொண்டிருக்கிறாய்? ஹாத்திமுடைய வீட்டிலேயே மூட்டை கட்டிப் போட்டுவிட்டல்லவா வந்திருப்பாய் என்று நம்பினேன்!

மாவியா : அந்த விதண்டாவாதமெல்லாம் வேண்டாம். வந்தவர்களுக்கு உணவளிக்க எனக்கு அனுமதியளிப்பீரா? மாட்டீரா? ஓரே பதில் சொல்லிவிடும்!

மாலிக் : இங்கே என் கூடாரத்திலிருந்து யாருக்கும் உணவளிக்க நான் அனுமதியேன்? இத்தகைய வழக்கத்தை விட்டு உன்னை நீக்க வேண்டுமென்றல்லவா, ஹாத்திமுடைய விவாக பந்தத்திலிருந்து உன்னை பிரித்து இங்கு கொண்டு வந்தேன்.

மாவியா : அப்படியானால், ஹாத்திமிடத்திற்கே ஆளை அனுப்பி உணவுப்பொருள் வரவழைத்து விருந்தாளிகளை உபசரிக்கட்டுமா?

மாலிக் : தாராளமாய் அப்படியே செய். நானும் இதைத்தான் சோதனை செய்து பார்க்க விரும்புகிறேன். உண்மையில் ஹாத்திம் தயாள குணமும் விருந்தோம்பும் தன்மையும் உள்ளவரா என்பது இதில் தெரிந்துவிடும்.

மாவியா : அதையும் தாங்கள் பிரத்தியக்ஷமாய் தெரிந்து கொள்ளப்போகிறீர், என்று பதில் கூறிவிட்டு மாவியா, தன் கூடா ரத்துக்கு வந்து, தன் வேலைக்காரியை அழைத்து, ஹாத்திம் தாயிக்கு, விருந்தினர் வந்திருக்கும் தகவலை சொல்லியனுப்பினாள்.

வேலைக்காரி ஹாத்திமை யணுகி, "வள்ளலே, தங்கள் மாஜீ மனைவி தங்களுக்கு ஸலாம் சொன்னார். நான் அவர் வேலைக்காரி. தங்களுக்கு அறிமுகமான சில யாத்திரீகர்கள் எங்கள் கூடாரத்தில் விருந்தாளியாக வந்து தங்கியுள்ளார்கள். அவர்களுக்கு உணவளிக்க எங்களிடம் ஒன்றுமில்லை. மாவியாவின் தற்போதிய புருஷன், விருந் தினர்களை லக்ஷியம் செய்யாமல் இருந்து விட்டார். விருந்தாளிகட்கு உணவும் சௌகர்யமும் தாங்கள் செய்து தருவீர்களா ?" என்று விண்ணப்பித்துக் கொண்டாள்.

அதற்கு ஹாத்திம் மனம் மிகப் பூரித்தவராய், "என்னுடைய விருந்தினர்கள் என்னை நினைத்து உங்கள் வீட்டுக்கு வந்து விட்டார் களா? பரவாயில்லை. அவர்களை உபசரிப்பதற்கு வேண்டிய சாதனங் களை நான் தருகிறேன். உன் எஜமானி மாவியா சௌக்கியமாயில்லை போலும்? அவள் இஷ்டம். சரி, என் ஆள்வசம் பேரீத்தப்பழக் கூடையும், பால் தரும் ஒட்டகமும், அறுப்பதற்கொரு ஒட்டகக் குட் டியும் அனுப்புகிறேன். அதிதிகளை நல்லவிதமாக உபசரியுங்கள். என் கூடாரம் என்றே அவர்கள் அதை நினைத்துக் கொள்ளட்டும். அதில் அவர்களுக்குத் திருப்தி இருக்கும்" என இன்மொழி பகர்ந்து, அதன் பிரகாரம் உணவுப்பொருட்களும் அனுப்பி வைத் தார். தானும் சுயமே கூடவந்து மாவியா வீட்டில் அந்த விருந்தினர் களை உபசரித்து மகிழ்வித்தார்.

மாவியா, ஹாத்திமின் உயர்ந்த உன்னத குணங்களையும், மாலிக் கின் அதம உலோபித்தனங்களையும் சீர்தூக்கி நோக்கினாள். தன் தவறுக்காக பெரிதும் வருந்தினாள்.

ஹாத்திம் தன் கடமை முடித்துச் செல்கையில், மாவியா அவரை யணுகி, "ஹாத்திம், நான் என் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கருதி னேன்; தங்கள் தான தருமங்களை ஊதாரித்தனம் என்று எண்ணி, தங்களை ரத்துச் செய்துவிட்டு வந்தேன். இங்கு புதுப் புருஷனிடம் நானோ, என் குழந்தைகளோ சௌக்கியமா யில்லை. என் குழந்தை கட்கு யார் இனி உணவளிப்பர்? தாங்களும் எங்களை கைவிட்டுப் போகலாமா ?" என்று மனம் குழைந்து பிரலாபித்தனள்.

அதற்கு ஹாத்திம் "மாவியா, உனக்கு வாய்த்த புருஷனைப் பற்றி குறைகூறுதே. இப்பிரபஞ்சத்தையும் ஜீவ ஜந்துக்களையும் சிருஷ்டித்து சம்ரக்ஷிக்கும் இறைவன், உனக்கும் உன் குழந்தைகட்

கும் உணவளித்து காப்பாற்றுவான். சஞ்சலமுறாதே. உனக்கு ஏதேனும் தேவைப்பட்டால் என்னிடம் கேட்டு ஆள் அனுப்பு. என்னாலான உதவியை செய்ய நான் எப்போதும் தயார்" என்றார்.

என்னே ஹாத்திமின் காருண்யம்! என்னே பெருந்தன்மை!!

## ஹாத்திமின் மரணம்.

ஹாத்திம் தாயீயின் வாழ்நாள் பூராவும் தியாகத்தின் மயமாகவே விளங்கியது. ஒவ்வொரு நாளும் அவர் பலர்க்குப்பேருபகாரியாய் இருந்து வந்துள்ளார். ஹாத்திம் தாயீயின் நாட்குறிப்பை எழுதுவது நம்முடைய நோக்கமில்லை. அங்ஙனம் அவருடைய தினசரி வாழ்க்கை விசேஷங்களை யெல்லாம் எழுதுவதென்றால் ஏடும் அடங்காது; காலமும்போதாது. ஆதலின் அவரது தான தருமப் பிரதாபங்களை விஸ்தரிக்காது விடுக்கின்றேன்.

(ஹாத்திம் தாயீயின் வாழ்க்கை விசேஷங்களையும், வீரதீர தியாகச் செயல்களையும் பற்றி, வியக்தமாகவும் விபரமாகவும் தெரிந்து கொள்ள விரும்பும் அன்பர்கள், "ஹாத்திம் தாயீ" என்ற கதைப் புத்தகத்தை வாங்கிப் படிப்பார்களாக.)

சாதாரணமாய் ஹாத்திம் தாயீ மற்ற அரபுகளைப் போலவே நீண்ட ஆயுள் வாழ்ந்திருந்து விட்டு, முதுமையில் ஒரு நாள், இயற்கை நியதிப் பிரகாரம், இறைவனின் ஆக்ஞையை ஏற்று இத்தரணியை நீத்து விண்ணுலகு ஏகினார். ஹாத்திமின் இம்மரணம் பொதுவாய் அக்கால அரபு நாட்டாருக்கும், குறிப்பாய் தாயீவம்சத்தினர்க்கும் ஆற்ற ஒண்ணாத் துக்கத்தை யளித்தது. கண்ணீர் விட்டனர் பலர்; கதறியழுதனர் பலர்; பிரலாபித்துத் திரிந்தனர் பலர்; துக்கத்தை மனத்துள்ளமென்று விழுங்கினர் பலர். இவ்வாறாய் சிறுவர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் எல்லோரும் அவரது பிரிவாற்றாமைக்கு ஆற்றொணாது அகம் குழைந்து வருந்தி வாடினர்.

ஹாத்திம் மரிக்கும் போது அவரது தாய் உயிருடனிருந்தனள். அந்தக் கிழவி தன் வள்ளல் மகன் ஹாத்திம் இறந்து விட்டான் என்பதை, இதர பிள்ளைகள் வாய்வழி கூறக் கேட்டு திக்பிரமை பூண்டு விட்டாள். அவளையும் அறியாது அவளது வாயிலிருந்து பின்வரும் கருத்துக்கள் அமைந்த பாட்டுகள் (ஒப்பாரிக் கீதம்) பொழியத் தொடங்கின :—

"ஹாத்திம், என் கண்மணி! உன்னுடைய ஸ்தானத்தை வகிக்க நான் பெற்ற பிள்ளைகளில் வேறொருவரும் லாயக்கில்லை; உனக்கு இணை நீயாகவே இருந்தாய். கண்மணி, நீ பிறந்து கண்விழித்தபோது நீ புரிந்த அற்புதம் என் கவனத்துக்கு வருகிறது. பிறவியிலேயே நீ தியாகத்தின் சொரூபமாய் விளங்கினாய்; முதலில் பிறர்க்கு அளித்துப் பிறகு உண்ணும் வழக்கத்தை கற்று வந்தாய். நீ பிறந்து பல நாள் வரை எனது தனங்களில் சுரந்த பாலைக் குடிக்காமலே இருந்தாய். என்னென்னமோ பிரயத்தனப்பட்டு உன் சிசுமனத்தின் கருத்தை. யறிய முயன்றோம்; பயனில்லை. ஒரு நாள் பக்கத்து வீட்டு ஏழைப் பெண்ணொருத்தியின் குழந்தைக்கு என் தனத்தினின்று பால் புகட்டினேன். அதைக்கண்டு நீ சிரித்து மகிழ்ந்து, எனது மற்றொரு தனத்தினின்று நீயும் பாலுண்டு பூரித்தாய். தினமே இதே வழக்கத்தை அனுஷ்டித்து வந்தாய். இவ்வண்ணம், பிறர்க்கு அளித்த பிறகே உண்ணும் நல்வழக்கம், உன்னிடம் ஆயுள் பரியந்தம் நிலைத்திருந்தது. நீ தெய்வ அருள்பெற்ற அண்ணல். நீ முதலில் என்னை விட்டுப் பிரிந்தாய். சுவர்க்கத்தில் எனக்கு முன்னிடம் தேடிவைக்க விரைந்துச் சென்று விட்டாய் போலும்! இதோ நானும் உன்னை நாடி வருகின்றேன்; கண்மணி இதோ வந்துவிட்டேன்"........

என்று பிரலாபித்து தாயாரும் அக்கணமே மூர்ச்சித்து விழுந்து மாண்டாள்! என்னே தாயன்பு!

ஹாத்திமின் மரணத்துக்கு ஆற்றாமல் கவிவாணர் ஒருவன் சரமகவி பாடினான். அதில் ஒரு அடியின் பொழிப்புரையும் கருத்துரையும் பின் வருமாறு:

"லயிஷான் னுதாமா ஆஷ ஹாத்திமு தாயீ—வ இன்மாத்த காமத் லிஸ்ஸக்காயி மாதமு"

("எதுகாறும் ஹாத்திம் ஜீவித்திருந்தாரோ அதுகாறும், 'ஸக்காவத்' என்னும் தானதருமம் வியாபித்து வளர்ந்தது; ஹாத்திம் மரித்து மறைந்ததும் ஸக்காவத்தும் மாண்டு மங்கிப் போய்விட்டது").

ஹாத்திமை பற்றிய புகழ் மொழிகளுக்கு அளவில்லை. அரபுகளில் அவரைப் புகழ்ந்துப் பாடாத கவிகள் இல்லை; அவரது ஸ்துதியில்லாத காவியங்கள் இல்லை; அவர் தர்ம உலகத்துக்கே ஓர் உதாரண புருஷராய் விளங்கினார்; விளங்குகிறார்.

(தொடரும்.)

# மஜ்மூஉல் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னுவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் நேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துக் கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ்ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் செய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப் பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 15

# மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும் அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது விலை அணா. 15.

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(6-வது பகுதி)

# திருக் குர்ஆன் :: :: :: :: சாரசங்கிரஹம்.

## பல விஷயங்களைப் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### 'கஹ்ப்'காரர் மீது நிகழ்ந்த அபூர்வ சம்பவம்.

(ஏ நபியே) அஸ்ஹாபே கஹ்ப் (குகையை யடைந்தவர்)களுடையவும், ரகீம் (ஊர்)காரர்களுடையவும் (விஷயமாய் நிகழ்ந்த) எமது அற்புதங்களை, அசம்பாவித அடையாள மென்று நீர் கருதுகின்றீர்? (அதாவது பண்டைக்காலத்தில், இறைவனை வழிப்பட்ட உத்தம கிறிஸ்துவர்களை, அக்காலக் கொடுங்கோலர் படுகொலை புரிந்து கொண்டிருந்தனர் எனவே,) அந்தக்காலத்திய சில வாலிபர்கள், (தங்கள் மனைவி மக்களோடும் பழகிய நாய்களோடும், மிகப்புராதனகால) மலைக்குகைக்குள் போய் புகுந்திருந்தனர். அப்போது (அவர்கள்) "ஏ எங்கள் இறைவனே, உன்னிடமிருந்து எங்கள் மீது கருணை புரிந்து (காப்பாற்றி) அருள் (எங்களை கொடுங்கோல் புரியும் அந்த இணைவைக்கும் கிறிஸ்துவர்களிடமிருந்து காப்பாற்று) எங்களுக்காக எங்கள் விவகாரத்தில் ஏதேனும் மார்க்கம் காட்டியருள்" என்று (பிரார்த்தித்து) வேண்டிக் கொண்டனர்.

எனவே (இறைவனுகிய) யாம், அவர்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டதும்), யாம் அந்த குகைக்காரர் மீது (எமது சக்தியால்) அந்த குகைக்குள்ளேயே (நீண்ட நித்திரையாக) சில வருஷங்கள் தூங்க வைத்து விட்டோம். (பல்லாண்டுகட்குப்) பின்னர், அவ்விரு கூட்டத்தாரில் எவரேனும் குகைக்குள் அன்னேர் தங்கியிருந்து விட்ட (நீண்ட) காலத்தை ஞாபகத்தில் வைத்திருக்கிறார்களா என்று (சோதித்துப்) பார்த்தோம். (ஸூரா: கஹ்ப்; ருகூஃ: 1.)

### அந்தக்குகைக்குள் மூன்னூறு ஆண்டு தூங்கினர்.

அந்த (குகைக்காரர்களாகிய) அஸ்ஹாபு கஹ்புகள், (மெய்மறந்து) மூன்றுநூறு ஆண்டுகள் (தூக்கத்தில்) கிடந்தார்கள். அதற்குமேலும் ஒன்பது ஆண்டுகள் அவர்கள் மீது கழிந்துப் போய்விட்டது "நபியே, (உமது காலத்தினர் இந்தச் சம்பவ கால அளவை நம்பாமற்போயினும் சரியே) அவர்களுக்கு (வற்புறுத்திச்) சொல்லி விடுவீராக. அவர்கள் குகைக்குள் எவ்வளவு காலம் (தூங்கிக்) கிடந்தனர் என்பதை அல்லாஹ் ஒருவனே அதிகம் அறியவல்லான். வானத்திலும் பூமியிலும் உள்ள மறைவான விஷயங்களின் ஞானமெல்லாம் அவனுக்கே உரியன; அவ்விறைவனே சகலவற்றையும் நன்கு பார்க்கக்கூடியவனுகவும், நன்கு

கேட்கக் கூடியவனுகவும் இருக்கின்ருன்; மக்களின் காரியாதிகளை நிகழ்த்திவைப்பவன் அவனைத்தவிர வேறுயாருமில்லை; அவனுடைய ஆக்ஞைகளில் யாரும் (குறுக்கிடுவதற்கு) இணைதுணை கிடையாது" என்றும் சொல்லிவிடுவீராக. (ஸூரா : கஹப்; ருகூ: 4)

## குகைக்குள் புகுந்திருந்தவர்கள் எத்தனைப்பேர்.

(குகைக்குள் புகுந்திருந்த) அவர்கள் மூன்று பேர்கள் என்றும் நான்காவது நபர் அவர்களுடைய நாய் என்றும் சில பேர்கள் சொல்கிருர்கள். மேலும், அவர்கள் (தொகை) ஐந்து பேர்கள்; ஆருவது நபர் அவர்களுடைய நாய் என்றும் சிலபேர்கள் சொல்லுகிருர்கள் (இவ்வாறு) பிரத்தியக்ஷமாய் பார்க்காமலேயே அன்னோர் அக்தப்போர்' பறக்க விடுகிருர்கள். இன்னும் சில பேர்கள் (அக்தக்கஹறபுகாரர்கள்) ஏழுபேர்கள், எட்டாவது நபர் அவர்களுடைய நாய் என்றும் சொல்கிருர்கள்.

ஏ நபியே (அந்த அக்தப்போர்காரர்களை நோக்கிக்) கூறிவிடுவீராக: அக்குகைவாசிகளின் சரியான தொகையை என்னுடைய ஏக இரக்ஷகன் மட்டுமே நன்கு அறியவல்லான். (குறிப்பான) சில மனிதர்களைத் தவிர்த்து வேறு ஜனங்களுக்கு அவர்களுடைய தொகை (விபரம்) தெரியவே தெரியாது. ஏ நபியே, நீவிரும் அவர்களுடைய தொகை (விபரம்) பற்றி சச்சரவு புரிந்து கொள்ள வேண்டாம். ஆனல் மேலெழுந்தவாரியாய் (அதைப்பற்றி) பேசுவதைத் தவிர்த்து; (இது பாதகமல்ல) எனவே 'அஸ்ஹாபு கஹபு'களைப் பற்றி நீவிர், வேறுயாரிடமும் விசாரித்தலையவும் வேண்டாம். (ஸூரா: கஹப்; ருகூ: 3.)

## எக்காரியத்துக்கும் 'இன்ஷா அல்லாஹ்' சொல்க.

எந்த ஒரு காரியத்தைப்பற்றியும் (அதைச் செய்ய நாடும்போது) 'இன்ஷா அல்லாஹ்' (இறைவன் நாட்டமுமிருந்தாற் செய்வேன்) என்று சொல்லாதவரை, 'நாளைக்கு இதைச்செய்தே தீர்ப்பேன்' என்று சொல்லாதீர்கள். அப்படி (பேச்சாரம்பத்தில்) இன்ஷா அல்லாஹ் (என்று) சொல்ல நீங்கள் மறந்துவிட்டபோதிலும் சரி, மீண்டும் ஞாபகம் வந்த சமயத்திலாவது அந்த க்ஷணமே (ஆண்டவன் நாடினல் என்று) உமது இறைவனை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் (எனவே, காரியம் செய்ய வெண்ணிக் கூறும்போது) இன்ஷாஅல்லாஹ் (ஆண்டவன் விரும்பினல் இக்காரியத்தை செய்வேன்) என்று சொல்லிக் கொள்ளுங்கள். (ஸூரா: கஹப்: ருகூ:4)

## இறுதிநாள் சம்பவத்தை (ஆகிரத்தை) நம்புங்கள்.

இது குர்ஆன்; பகிரங்கமான புத்தகத்தின் அத்தாக்ஷிகளாகும். இவற்றில் முஸ்லிம்கட்கு நேர்வழி சன்மார்க்கம் இருக்கிறது. (ஐங்காலம்) தொழுதுக் கொள்கிறவர்கட்கு சுபச்செய்தியும் (இதில்அடங்கி)

இருக்கிறது. அன்னோர் ஜக்காத்தும் (பொருள்தானமும்) கொடுப்பார்கள்; இறுதிநாள் (சம்பவம்) மீது நம்பிக்கை கொண்டிருப்பார்கள். எனவே, எவர்கள் இறுதிநாள் (ஆகிரத்) மீது நம்பிக்கை கொண்டிருக்க மாட்டார்களோ அவர்களுடைய தீய செயல்களும் அவர்களுக்கு நற்செயல்களாகவே தெரியும்; (ஏனெனின் அவர்களின் அறிவுக் கண் முன் திரைவிழுந்து போய்க்கிடக்கிறது. அன்னோர் வழிகெட்டு அலைபவர்களுமாவர் இப்படிப்பட்டோர் (ஆகிரத்தில்) மகாக் கொடிய வேதனைக்கு ஆளாகியே தீருவர் மறுலோக (ஆகிரத்துடைய) வாழ்வில் அன்னோர் மகாக் கடும் நஷ்டம் அனுபவிப்பார்கள். (ஸூரா: நமல்: ருகூ: 1)

## வெற்றிபெறுவோர் நல்லொழுக்கஸ்தரே யாவர்

அலிப்-லாம்-மீம்: இது விவேகம் நிறைந்த வேதவாக்கியங்களாகும் இவற்றில் நல்லொழுக்கஸ்தர்களுக்கு சன்மார்க்கமும் (ஹிதாயதும்) ரஹ்மத்தும் (நல்லருளும்) இருக்கின்றன. எவர்(ஐங்காலம் இறைவனைத்) தொழுதுக் கொள்கிறார்களோ, எவர் ஜக்காத் (தானம்) கொடுக்கிறார்களோ, எவர் இறுதி வாழ்வு (ஆகிரத்) மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களே, (இகத்திலும் பிரத்திலும்) வெற்றி பெறுவோர்களாவர் (ஸூரா: லுக்மானி: ருகூ: 1.)

## அறிவுடையோரும் அறிவிலிகளும் சமமாவரோ

இரவு நேரத்தில் எழுந்து நாழிகையாய் வணக்கம் செய்கிறவரும் (அல்லாஹ்வுடைய திருமுன் சிரமபணிந்து) ஸஜ்தா செய்கிறவரும், இறைவன் முன் நின்று வணங்குபவரும் இறுதிநாளை (ஆகிரத்தைக்) கொண்டு அஞ்சுபவரும்; இரக்ஷகனுடைய பேரருள்பால் நம்பிக்கை கொண்டிருப்பவரும் (சத்திய சீலர்களாவர்; இன்னோர்) எங்ஙனம் வழிக்கெட்டவர்களாக முடியும்? (ஏ முஹம்மதே (ஸல்) ஜனங்களுக்குச்) சொல்லி விடுவீர்களாக: (இல்மு எனும்) அறிவுஉடையவர்களும் அந்த அறிவில்லாதவர்களும் எங்ஙனம் சரிசமமாய் விட முடியும்? இவ்வுண்மைகளை பகுத்தறிவாளர்களே உய்த்துணர வல்லார். (ஸூரா: ஜுமா: ருகூ: 1.)

## பூக்தகோடிகட்கு சுவர்க்க ஆபரணம் உண்டு

நம்பிக்கை கொண்டு (மூமின்களாக) இருக்கிறார்களே அவர்களையும் (இகத்தில்) புனித காரியங்கள் புரிகிறார்களே அவர்களையும் அல்லாஹூத் தஆலா (சுவர்க்க) உத்தியானவனங்களில் வாசஞ் செய்ய அருள்வான். அவைகளின் கீழே (அருள்) நதிகள் ஓடிக்கொண்டிருக்கும். அன்னோர்க்கு (திருபாக்கிய) சுவர்ணபரணங்களும், முத்தாரங்களும் அணிவிக்கப்படும். ஆங்கு அன்னோரின் ஆபரணம் (பேரின்பப்) பீதாம்பரங்களாக இருக்கும். (ஸூரா: ஹஜ்: ருகூ: 3)

# காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

## (7—வது பகுதி)

மஹான் ஒருவர், ஒரு தடவை பக்தாத் ஷரீபுக்குச் செல்ல தீர்மானித்தார். ஹஸ்ரத் ஸையதினா முஹையத்தின் ஷய்க் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் ரௌலா ஷரீபை தரிசித்து பாத்திஹா கொடுத்து வரவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் சமாதிக்கான புது போர்வையையும் இதர தர்காவுக்கான காணிக்கைப் பொருள்களுடன் யாத்திரைக்குரிய முஸ்தீப்புகளையும் செய்து கொண்டு பிரயாணத்தின் முதல் நாள் கியாஸ் பூரில் தங்கினர்.

அவர், அவ்வாறு, கியாஸ்பூரில் தங்கின முதல் இரவே, ஓர் சொப்பனங் கண்டார்.

சொப்பனத்தில், ஹஸ்ரத் முஹையத்தீன் (ரஹ்) அவர்கள் விஜயஞ் செய்து படுத்திருந்தவரின் ஆத்மாவைநோக்கி "ஓ! ஆத்மாவே நீ எங்கே போகிருய்?" என்று கேட்டதற்கு அது "நான் தங்கள் ரௌலா ஷரீபின் மீது போர்வையிடப் போகிறேன்" என்று பதிலளித்ததும், ஹஸ்ரத் முஹையத்தீன் (ரஹ்) அவர்கள் "நான் இங்கேதானே இருக்கிறேன்" என்று மொழிந்தார்கள்.

ஆத்மா:—"இங்கே என்ருல் இது டில்லியைச் சேர்ந்த ஸ்தலம், தாங்கள் இங்கு எந்த விடத்தில் இருக்கிறீர்கள்?" எனக்கேட்டது. "நீ, 'நிஜாமுத்தீன்' பெயரைக் கேட்டதில்லையா? அவர் நான் அல்லவோ? அப்படியிருக்க நீ எதற்காக அவ்வளவு தூரப்பிரயாணத்தை மேற்கொள்ளவேண்டும்?" என்ருர்கள்.

மறுநாள் காலையானதும் சொப்பனங் கண்டவர் தம்கூட இருந்து வந்த உலமாக்களையும் மஷாயக்மார்களையும் ஒன்றுகூட்டி தம் சொப்பன பலனைப்பற்றி வினவினர்.

அங்கு, ஒன்று கூடிய அனைவரும் முறையே தாங்களும் அதே மாதிரியான சொப்பனத்தை அன்று இரவு கண்டதாக விவரித்தார்கள்.

இறுதியாக அவர்களின் ஒத்த அபிப்பிராயத்தின் மேல், அவர் கொண்டு வந்திருந்த சகல வஸ்துக்களையும் ஹஸ்ரத் சுல்தானுல்

மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் புனித தர்காவிலேயே காணிக்கையாக சமர்ப்பித்து விட்டார்கள்.

பக்தாத் ஷரீபுக்குப்போய் வர எவ்வளவு பிரயாணச் செலவை அவர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்தனரோ, அச்செலவு பணத்தை முழுவதும், தர்காவிலுள்ள கண்காணிப்பு ஆட்களுக்கும் முஜாவிர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கு மிடையே பட்டு வாடா செய்து விட்டார்கள்.

## ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் மரண ஆவல்.

ஸீரத்துஸ்ஸாலிகின் என்ற கிதாபில் பின்கண்ட விஷயம் வரையப்பட்டிருக்கிறது:—

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் மரண தருவாயில் ஷய்க்ருக்னுத்தீன் அபுல் பத்ஹ் முல்தானி (ஹஸ்ரத் ஔலியா அவர்களின் ஆப்த நண்பர்) டில்லிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் அவர்களைப் பார்க்க அவர்கள் இருப்பிடத்திற்குப் போனதும் படுத்திருந்த ஹஸ்ரத் ஔலியா அவர்கள், ஷய்க்ருக்னுத்தீனை கண்ணெடுத்துப் பார்த்தவுடன் "என்னுடைய கட்டிலின்மேல் உட்காருங்கள்" எனச் சொல்லியபோது "குத்புல் வக்த், மஹபூபெபப்புல் இஸ்ஸத் அவர்களே! (தற்கால நட்சத்திரம், மாட்சிமைவாய்ந்த அல்லா உடைய அன்பினர்களே!) தங்களின் திருகட்டிலின்மேல் உட்கார யாருக்கு சக்தியுண்டு?" என்று மிக்க தாழ்மையுடன் பதிலளித்தார்கள்.

அதனல், ஹஸ்ரத் ஔலியா அவர்கள் தம் முரீதுகள் மூலமாய் நாற்காலி யொன்றை தருவித்து அதன் மீது அவர்களை உட்காரச் சொன்னர்கள்.

ஷய்க்ருக்னுத்தீன் நாற்காலியின்மேல் உட்கார்ந்ததும் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் தேக நிலையைப்பற்றி விசாரித்து விட்டு "சர்வ வல்லமையுள்ள ஆண்டவனுகப் பட்டவன் ஜீவித்தல், மர்ணித்தல் என்ற விஷயத்தில், நபிமார்களுக்கும் ஔலியாக்களுக்கும் அவர்கள் இஷ்டப்படி சுயேச்சைக்குரிய அதிகாரத்தை தந்தருளியுள்ளான். தாங்கள் அவ்வதிகாரத்தை பிரயோகித்து, உலகின் கண் பொதுமக்களுக்கு ஆதரவளிக்கத்தக்களவில் இன்னமும் சிறிது காலம் ஜீவித்திருக்கக் கூடாதா? அவ்வாறு ஜீவித்திருந்தால் இன்னமும் எத்தனையோ ஜாஹில்கள் (மூடர்கள்) பரிபூரண மனுஷத்தன்மை யடைந்து விடுவரே" என்று முறையிட்ட போது, ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "என் உண்மை நன்பனின் (ஆண்டவனின்) நட்பாகப்பட்டது எனக்கு அளவுக்கு மேலாகி விட்டது. அந்த நட்பின் உணர்ச்சியானது ஒரு

நிமிஷ நேரத்திற்கேனும் என்னை விட்டும் அகன்று போகக் காணோம். அதன் நிமித்தம் என்னுடைய ஒவ்வொரு சுவாசமும் கூட என்னை வற்புறுத்தி அவன் பக்கம் இழுத்த வண்ணமா யிருக்கிறது. மேலும் நான் ரசூலுல்லா (ஸல்) அவர்களையும் இரவு தோறும் கனவில் தரிசிக்கிறேன். அவர்கள் விஜயமானதும் 'நிஜாமுத்தீனே! உம்மைப் பார்க்க நான் விசேஷ ஆவலுள்ளவனு யிருக்கிறேன், சீக்கிரம் என் பக்கத்தில் வந்து விடும்' என்று மொழிந்தருளுகிறார்கள்" என்று விவரித்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் வாயலாய் அவ்வரிய மொழிகளைக் கேட்டவுடன் ஷய்க் ருக்னுத்தீன் அவர்களும் அச்சமயம் அங்கு கூடி யிருந்தவர்களும் துக்கம் சகியாது 'ஓகோ' என்று அழுக ஆரம்பித் தார்கள். பிறகு ஷய்க்ருக்னுத்தீன் அவர்கள் ஹஸ்ரத் அவர்களிடம் "தாங்கள் எங்களுக்கு ஏதேனும் கடைசி உபதேசம் செய்யுங்கள்" எனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "நான் எனக்குத் தெரிந்த ஓர் விஷயத்தை சொல்லுகிறேன். சிஷ்தியா வமிசத்தில் உள்ள மஹா னொருவர் தாம் இறக்கும் தருணத்தில் 'நான் இறந்த பின்னர், என் மையத்துக் கருகில் 'ஸமா' மஜ்லிஸ் நடத்துங்கள் அதற்குப் பின்னர் என்னை நல்லடக்கம் செய்யுங்கள்' என்று சொல்லி இறந்த பிரகாரமே (மையத்துக் கருகில்) ஸமாவில் ஜனுஸா பாடல்கள் பாடப்பட்டன. உடனே இறந்தவர் எழுந்து நின்று படுத்தார். ஏழு நாள் அதே போல் 'ஸமா' நடந்தேறியது. பிறகு 'ஸமா'வை முற்றிலும் முடித்து விட்டு அவரை நல்லடக்கம் செய்தார்கள். நானும் அம்மஹானின் 'ஸமா' விஷயத்தில் அவரைப் பின்பற்ற விரும்புகிறபடியால் நீங்கள் நான் இறந்ததும் அதே போல் ஸமா நடத்துங்கள்" என்று உபதேசித் தார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் 'வபாத்' அடைந்த போது ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் ஜனுஸா தொழுகையில் இமாமத் மேற் கொண்டார்கள். ஜனுஸா தொழுகை முடிந்ததும் ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் "தம்மை ஹஸ்ரத் ஔலியா அவர்கள் 4 வருஷங்களாக இமாம் வேலையில் நியமனம் செய்திருந்ததானது, அந்தரங்கத்தில், அவர்களின் ஜனுஸா தொழு கையில் நான் இமாமாக இருந்து தொழுகை நடத்த வேண்டும் என்பதற்காகத் தான் என்ற இரகசியம் இன்றே எனக்கு வெளியா யிற்று" என்று பெரும் ஆயாசத்துடன் கூறிய பின்னர், அத்தகைய அரிய பாக்கியம் தமக்கு கிடைத்ததற்காக அவர்கள் நாயனை துதித்தார்கள்.

ஜனஸா தொழுகையை முடித்து விட்டு ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் 'ஸமா' நடத்துவதற்காக புலவர்களை தருவிக்க எத்தனித்த போது ஹஸ்ரத் அவர்களுடைய கலீபாக்கள் "ஸமா வேண்டாம், ஏனெனில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஸமா விஷயமாக எந்த மஹானைக் குறித்துச் சொல்லி யிருந்தார்களோ அந்த மஹான் சம்பந்தமான ஸமா 7-நாள் வரையில் நடந்து முடிவுற்றது. ஆனல் எங்கள் ஹஸ்ரத் ஔலியா அவர்களோ 'ஸமா' ஆரம்பித்தால் கியாமத் நாள் பரியந்தம் அதை முடிவுற விடாமல் தயக்கம் செய்வார்கள். அப்பால், உலகில், அது விஷயமாக வீண்புகாரும், கிளர்ச்சிக் குழப்பங்களும் ஏற்பட்டுப் போம்" என்று விவரித்தார்கள்.

கலீபாக்களின் கருத்தை விளங்கிக் கொண்ட ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் "அதுவும் சரிதான்"என ஒப்புக்கொண்டு ஜனஸாவை தூக்கிச் செல்வதில் ஈடுபட்டு விட்டார்கள். ஜனஸாவிலிருந்து புனித ஜடலத்தை கபுரில் இறக்கும் சமயத்திலும் ஷய்க்ருக்னுத்தீன் அவர்களே கபுரில் இறங்கினர்கள், கபுரிலிருந்து வெளி வந்த சமயம் அவர்களுக்கு பிரக்ஞையற்றியிருந்தது.

கூடியிருந்தவர்கள், காரணத்தை வினவினர்கள், அதற்கு ஷய்க் அவர்கள் (அக்காலத்திய குதுப்மார்களில் ஒருவராக விளங்கப்பட்டு வந்தவர்கள்) பின்வருமாறு பதில் கூறினர்கள் :—

நான் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் புனித ஜடலத்தை கபுரில் இறக்கியதும், றஸூலுல்லா (ஸல்) அவர்களின் சிறப்புற்ற புனித ஆத்மாவானது கபுரில் விஜயமாகி ஹஸ்ரத் நிஜாமுத்தீனை தன்பக்கத்தில் அமர்த்திக்கொண்டது. நபிநாயகத்தின் ஒளியை கவனிக்கத் தக்களவில் எனக்கு முஷாஹிதா சக்தி வாயப் பெற்றிருந்தபடியால் நான் அதை சற்று நேரம்வரையில் கவனிக்க முடிந்தது, அதற்கப்புறம் பிரக்ஞையற்றுப் போனேன்"

"மிர்அத்துல் அஸ்ரார்" என்ற கிதாபில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

ஹஸ்ரத் சுல்தானுல் ஔலியா நிஜாமுத்தீன் அவர்கள் "எங்கேனும் ஒரு மூலைமுடக்கில் வீற்றிருந்தபடியே வெளி விஷயங்களை யாவும் உள்ளவாறே எடுத்துரைப்பார்கள். அவர்கள் ஜீவித்திருந்த காலத்தில் மக்கள் அவர்களைக் கொண்டு அடைந்து வந்த பலாபலன்களைப் போலொத்த பலாபலன்களையே, இன்னமும் அவர்களைக் கேட்டுக் கொள்பவர்கள் அடைந்து வருகிறார்கள் என்பதற்குத்தடை கிடையாது.

யாத்திரீகரொருவர் விவரிக்கிறார் :—நான் ஹிஜ்ரி 1052-ல் ஹஸ்ரத் அவர்கள் தர்காவுக்குச் சென்றேன். அவர்களின் ஆத்ம

சம்மந்தமான அனுக்கிரக பாக்கியங்களை ஏராளமாக அடைந்தேன் சுப்ஹானல்லா! நாளது வரையிலும் ஹஸ்ரத் அவர்களின் சிறப்பும் மகிமையும் நாளடைவில் அதிகரித்துக் கொண்டே போகிறது. கியாமத் நாள்வரையில் அது, இதே நிலையில் தான் இருக்குமென்பது திண்ணம்.

டில்லியில் எண்ணிறந்த ஒளலியாக்கள் அடக்கமா யிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுக்கிடை நான்கு விடங்கள் முதன்மைவாய்ந்திருக்கின்றன. (1) ஹஸ்ரத் குத்புல் அக்தாப் காஜா குத்புத்தீன் பக்தியார்காகி (2)ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் (3) ஹஸ்ரத் ஷய்க் நஸீருத்தீன் சிராகே தெஹலி (4) ஹஸ்ரத் ஷாதுர் கமான் பியாபானி.

காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம்

முற்றுப் பெற்றது.


## மஜ்மூஅ முனாஜாத்.

சுத்த தமிழ்

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலைப்பாத்திஹா, ஸலவாத்துப்பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், ஸரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணா. 8

ஷை அரபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

வாழ்க்கைச் சரிதம் :

# சர் இக்பால்

எஸ். எஸ். அலாவுதீன்.

வாழ்க்கைச் சரிதங்கள் காலப்பழக்கத்தால் மாய்ந்து மறையும் இயல்புடையது. எனினும் சிலவை என்றும் நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்தது. அடிவானத்தில் சில மரங்கள் மட்டும் உயர்ந்து காண்பது போல, கடந்த கால வாழ்க்கைச் சரிதங்களிலும் சில முக்கிய நபர்கள் மட்டுமே உயர்ந்து ஒளி வீசிக்கொண்டிருப்பர். மனிதனால் உயரக் கூடிய எல்லாவற்றிலும் உயர்ந்து, எல்லாத் தலைமுறைகளுக்குமாக வாய்ந்த மதத்தலைவர்களின் செய்திகள்தான் எதிர்காலத்திற்கு மங்காத ஒளி தரக்கூடியது. காலங்களுக்கும் தேசங்களுக்கும் விலைமதிக்க வொண்ணாத அறிவுரைகளை வழங்கிச் சென்ற அந்த மனித மாணிக் கங்களை மறப்பது சிறப்பாகாது. எனினும் மறதி மனிதனுக்கு இயற் கையே. எனவே, நினைவுத்திரியை இடையிடையே தீண்டிவிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது.

அல்லாமா சர் இக்பால்—புரட்சித்தென்றல் வீசும் ஒரு புதுமைக் கவி, ஆராய்ச்சி யறிவுபெற்ற ஒரு அரசியல் வாதி, தன்னிறைவு பெற்ற ஒரு தத்துவஞானி, சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஒரு சுய நல மற்ற தேசபக்தர்—என்ற நிலைமைகளில், பாரத நாடும், சலிப்பில்லாது உழைத்த ஒரு சமூக சேவகர் என்ற நிலையில் முஸ்லிம் உலகமும் என் றென்றும் அவரை மறக்க முடியாது ; மறக்கக்கூடாது.

முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரும் அந்த மகாத்மாவின் வாழ்க் கையை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது என்பதால் அவரது வாழ்க்கைக் குறிப்புகளை ஈண்டு தருகிறேன்.

**பிறப்பு :** 1877-ம் ஆண்டு பஞ்சாப் மாகாணத்தில் சியோல் கோட் எனும் இடத்தில் இந்த வெள்ளி நட்சத்திரம் உதயமாகியது. இவரது பரம்பரையினர் பஞ்சாப் பிராமணர்களாக இருந்தார்களாம். இக்பாலின் தந்தையார் வியாபார நிமித்தமாக பஞ்சாபில் குடியேறினர்.

**கல்வி :** தனது அடிப்படைக் கல்விக்கு அல்லாமா ஒரு 'மக்தப்' பில் சேர்ந்தார். பிறகு 'ஸ்கோச்மிஷன்' உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்து படித்தார். அங்கிருந்த ஒரு ஆசிரியரும், பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்ற அறிஞருமான மௌலானா மீர்ஹஸ்ஸன் கமது அல்லாமாவின் அசாதாரணமான புத்திக்கூர்மையையும் அறிவுத்திறனையும் கண்டு அப்போதே வியந்தார் ; புகழ்ந்தார்.

ஸ்கோச்மிஷன் உயர் நிலைப்பள்ளியில் மெட்ரிகுலேஷன் தேர்தலில் வெற்றிபெற்று, எஸ். எம். கலாசாலையில் சேர்ந்து எப். ஏ. பட்டமும் பெற்றார். பின்னர் லாகூர் அரசியலார் கல்லூரியிலிருந்து எம். ஏ. பட்டமும் பெற்றார். அதன் பிறகு அவர் சிலகாலம் ஓரியன்டல் கல்லூரியிலும், லாகூர் அரசியலார் கலாசாலையிலும் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார்.

ஆனால் மேல் படிப்புக்குச் செல்ல வேண்டுமென்ற ஆர்வம் அவரை உந்தித்தள்ள 1905-ல் இங்கிலாந்து சென்றார். கேம்ப்பிரிட்ஜ், ஹட்சன்பர்க் முதலிய கல்லூரிகளில் பயின்ற பிறகு மூனிச்பல்கலைக் கழகத்திலிருந்து பி. எச். டி. என்ற பட்டத்தையும் வெற்றியுடன் பெற்றார். அதன் பிறகு பார்-அட்-லா தேர்விலும் வெற்றிமாலை சூடிக் கொண்டு தாயகம் திரும்பினார்.

**அதன் பின்னர் :** இக்பாலின் சட்டப் படிப்பு அவரது வாழ்க்கை இலட்சியத்தை கொஞ்சமும் பாதிக்கவில்லை யென்றே கூறலாம். பால கவிஞராக இருந்த அவர் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்தை மிக வெற்றிகரமாக முடித்தார். ஆனால், இந்த உலக நடவடிக்கைகளிலிருந்து, ஒரு தத்துவக் கவிஞன் என்ற முறையில் அவர் தள்ளி நிற்கவில்லை. மூன்றாண்டுக் காலம் பஞ்சாப் சட்டசபையின் அங்கத்தினராகப் பணியாற்றினார். இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டுக்கு அவர் இரண்டாவது தடவையும் லண்டன் சென்றிருந்தார். அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அநேக ஆண்டுக்காலம் அஞ்சுமன் ஹிதாயத் சங்கத்தின் தலைவராகவும் தொண்டு செய்திருக்கிறார். இந்த விஞ்ஞான உலகத்தின் மீதும் அந்தத் தத்துவஞானியின் பார்வை செல்லத்தான் செய்தது. கேம்பிரிட்ஜில் தத்துவம் படித்துக் கொண்டிருக்கும்போது, பொருளாதாரத்தையும் முயற்சியுடன் படித்தார். நமது சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இஸ்லாமிக மத போதம் குறித்து புகழ் பெற்ற ஆறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இதுபோன்ற அழைப்பிதழ்கள் வெளிநாடுகளிலிருந்தும் வந்து கொண்டு தானிருந்தது. ஆனால் இடைவிடாத அவரது உடல் நலக்குறைவால் அந்த மகா கவிஞனின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனுறும் வாய்ப்பு வெளிநாட்டாருக்குக் கிட்டவில்லையென்றே கூறலாம். ஜீவின்மிளிரும் கருத்துக்களடங்கிய எத்தனையோ நூல்களையும் இயற்றி யிருக்கிறார்.

**இறப்பு :** 1938-௵ ஏப்ரல்-௴ 28௳ அவர் பூதவுடல் நீத்து, புகழுடம்பு எய்தினார். இக்பால் இறந்து விட்டாலும் அவரது கருத்துத்தோய்ந்த கவிதைகள் இன்னும் நம்முடன் இருக்கிறது. அவைகளைப் படித்து இன்புறும் போதெல்லாம் இக்பால் நம் மனக் கண்முன் வந்து காட்சி தருகிறார்.

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 11–வது பகுதி)

### 21–வது அத்தியாயம்.

குலோரியா நேராக தனது ஆபீஸுக்கு செல்ல, அங்கு ஸிம்ஸன், அநேக கடிதங்களை உடைத்து படித்தவாறிருந்தார்.

"இது தான் அந்த சாவியா? நல்லது இதை அங்கு வை. இந்த கடிதங்களுக் கெல்லாம் பதில் நீ தான் எழுத வேண்டும். இக்கடிதங்களுள் அநேகம் இளம் வாலிபர்களிட மிருந்து வந்துள்ளன. அவர்களுக்கு துப்பறியும் தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமாம். அக்கடிதங்களுக்கு பதில் எவ்வாறு எழுத வேண்டு மென்று ஒரு மாதிரி பதில் கடிதத்தின் காப்பி பைலிலிருக்கும். அதைப் பார்த்து பதில் எழுதி விடு. இந்த கடிதம் ஒரு கிழவியிட மிருந்து வந்துள்ளது. அவளது வேலையை தற்போது ஒத்துக் கொள்ள எனக்கு நேரமில்லை யென்று பதில் எழுதி விடு" என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டே, குலோரியா வைத்த சாவியை கையில் எடுத்து கூர்ந்து கவனித்தார்.

"நீ இன்ஸ்பெக்டர் பென்டனை சந்தித்தா யல்லவா?" இதைக் கேட்டதும் அவள் சிறித்துக் கொண்டே "நீங்கள் சொல்வது மிக ஆச்சரியமாக யிருக்கிறது. நான் பென்டனை சந்தித்தேன், அது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டாள்.

"உனக்கு எவ்வாறு நல்ல அழகு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் போல் எனக்கு இந்த அதிசய சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லி அவளை வேலையை கவனிக்குமாறு அனுப்பினர்.

குலோரியா தனக்காக கொடுக்கப்பட்ட பக்கத்து அறையில் போய் கடிதங்களுக்கு பதில் எழுதும் வேலையில் ஈடுபட்டாள். சிறிது நேரத்திற்குப் பின் அவ்வறைக்கு ஸிம்ஸன் வந்து, இன்ஸ்பெக்டர் பென்டனை டெலிபோனில் கூப்பிடுமாறு சொல்லிச் சென்றார். குலோரியா டெலிபோன் செய்யும் போது, பென்டன் தனது ஆபீஸிலில்லை. சுமார் அரை மணி நேரத்திற்குப்பின் வர, குலோரியா ஸிம்ஸன் அறையிலுள்ள டெலிபோனுக்கு கனக்ஷன் கொடுத்தாள்.

"மிஸ்டர் பென்டன்! நான் நதி ஓரத்திலுள்ள பெர்ரிஹேறால்டின் வீட்டைச் சோதிக்கப் போகிறேன். அங்கு மாரீஸ் ஒளித்துக் கொண்

187040.

டிருக்கலா மென்று எண்ணுகிறேன். மத்தியானம் சாப்பாட்டிற்குப் பின் நீங்கள் 2½ மணிக்கு இங்கு வருகிறீர்களா?''

இந்த டெலிபோன் சம்பாஷணையை குலோரியா கேட்டு ஒரு துண்டு காகிதத்தில் எழுதிக் கொண்டாள்.

2½ மணிக்கு பென்டன் வந்தார். வெளியி லிருந்து இவள் யிருக்கும் அறைக்கு வராமல் நேராக ஸிம்ஸன் அறைக்கு வர வழி யிருந்தது. குலோரியாவால் பென்டனை பார்க்க முடியவில்லை. ஆனால் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டாள். சிறிது நேரத்தில் இருவரும் புறப்பட்டனர்.

அவர்கள் சென்றதும் குலோரியா ஒரு தந்தி பாரத்தை எடுத்து "ஸிம்ஸன், ஆற்றோரமுள்ள பெர்ரி வீட்டை சோதிக்க சென்றிருக் கிறார்'' என்று எழுதி "பிரவ்ன், 55, பேக்கர் தெரு''வுக்கு அனுப்பினாள்.

ஆற்றோரமாக அவ்வீடு ஒரு மேட்டின் பேரில் கட்டப்பட்டதா யிருந்தது. அவ்வீட்டை சுற்றியுள்ள மரஞ் செடிகள் காய்ந்திருந்தன. வீடும் பாழடைந்திருந்தது. ஜன்னல்க ளெல்லாம் உடைந்திருந்தன. இவர்கள் கதவைத் திறந்து உள் சென்று பார்க்க சிலந்திக் கூடுகள் நிறைந்திருந்தன.

"இவ்விடத்தில் மாரீஸ் எவ்வாறு இருக்கக்கூடும்?'' என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டே சுற்றிப் பார்த்தார். வீடு பூராவும் சுற்றி பார்த்தனர். மாரீஸ் இருப்பதாகத் தெரியவில்லை. மேலே சாமான்கள் போட்டு வைக்க ஒரு அறை யிருந்தது. அதற்கு ஒரு மரப்படிக்கட்டும் யிருந்தது.

"மேலே போய் பார்த்து வருகிறேன்'' என்று ஸிம்ஸன் சொல்லி மேலே சென்றார். சிறிது நேரத்தில் கீழிறங்கி, ஒன்று மில்லை யென்றார்.

"நீங்கள் ஒன்றும் காணப்போவதில்லையென்று எனக்கு முன்பே தெரியும்'' என்றார் பென்டன்.

பிறகு இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர். இவர்கள் அவ் வீட்டை விட்டு கடந்து சிறிது தூரம் செல்லும்போது, அவ்வீட்டு மெத்தை அறையின் ஜன்னல் வழியாக ஒரு மனிதன் தாடியுடைய வாய் இவ்விருவர் போவதை பார்த்தார். ஆனால் தற்போது இவரு டைய சிநேகிதர் யாரும் இவரைப் பார்த்தாலும் இவரை மாரீஸ் என்று சொல்லுவதற்கு தயங்குவர் என்பதில் சந்தேகமில்லை.

## 22-வது அத்தியாயம்.

"உங்களை பெரிய துப்பறிபவர் என்று நினைத்தேன். ஆனால் நீங்களோ முட்டாள். பெரிய முட்டாள்" என்று கோபத்துடன் சொன்னார் கிரீன். இவ்வாறு அவர் சொல்வதற்கு காரணம் அவர் முன்னிருந்த பண நோட்டுகளின் கட்டுதான். அவ்வளவு பணம் தன்னை விட்டுபோகப் போகிறதே என்று எண்ண எண்ண மன அதிர்ச்சி ஏற்பட்டு சப்தமிட்டார்.

"நான் முட்டாளா யிருக்கலாம். இருந்தாலும் எனது தொழிலை என் இஷ்டப்படிதான் செய்வேன். இந்த பெண், இரத்தச் சின்ன சங்கத்தை பிடிப்பதில் எனக்கு உதவியா யிருப்பாளென்று நினைத்தே அவளை வேலைக்கு வைத்தேன்" என்றார் ஸிம்ஸன்.

"நான் சொல்வதைக்கேள். அந்த பெண் அக்கூட்டத்தைச் சேர்ந்தவள். பணத்தை உங்களிடமிருந்து வாங்க அவள் தான் வருவாள்" என்று கோபத்துடன் கிரீன் சொன்னார்.

"அப்படி அவள் வரும் பக்ஷம் அவளைப் பிடித்து சிறைச் செய்யப்படும். எப்படியும் உங்கள் நோட்டின் பேரில் வைத்த என் கண்களை எடுக்கமாட்டேன். என்னிடமிருந்து இரத்தச் சின்ன சங்கம் நோட்டுகளை அபகரித்து விட்டால் அதன் பொறுப்பு என்னைச் சார்ந்ததே. எனது வேலை உங்களின் உயிரைக் காப்பாற்றுவதும் இரத்தச் சின்ன சங்கத்தின் பாய்ச்சல் உங்கள்மேல் விழாது என் பக்கம் திருப்புகிறேன்" என்றார்.

"சரிதான் சரிதான். நான் நினைத்தபடி நீங்கள் பெரிய முட்டாளாக தோன்றவில்லை. உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்று அவசர அவசரமாக கிரீன் சொல்லிக் கொண்டே, தன் முன்னிருந்த நோட்டுகளை, தான் நேசித்த வஸ்தை இழக்கப்போகிறோமே என்ற வருத்தத்துடன் இரக்கமாக, தன் கைகளால் தடவினார். பிறகு அவைகளை எடுத்து ஒரு பெரிய கவரில் போட்டு, சகிக்கொணு துயரத்துடன் ஸிம்ஸனிடம் கொடுத்தார்.

"மாரீஸைப்பற்றி யாதும் தகவல் தெரியவில்லையா? அவன் என்னை 2000 பவுண்ட் மோசம் செய்து விட்டான். நான் முட்டாள் தனமாக ஹட்டனின் சொல்படி அவன் வியாபாரத்தில் 2000 பவுண்டை போட்டேன்" என்றும் கிரீன் சொன்னார்.

ஸிம்ஸன் எழுந்து கதவை திறந்து கொண்டே "உங்களுக்கு ஹட்டனைப்பற்றி நன்றாகத் தெரியுமா?" என்று கேட்டார்.

"அவன் ஒரு மோசக்காரன் என்றுதான் தெரியும்"

"அவன் எங்கிருந்து வந்தவன்? இதற்குமுன் என்ன செய்து கொண்டிருந்தானென்பது தெரியுமா?"

"பிரான்ஸிலிருந்து வந்ததாக கேள்வி. அவனைப்பற்றி எனக்கு கொஞ்சம்தான் தெரியும். அவனை எனக்கு பெர்ரிதான் அறிமுகப் படுத்தினுர். அவன் பிரான்ஸில் ஏதோ மோசங்கள் செய்ததாயும் அதனல் ஜெயிலிலிருந்ததாகவும் கேள்வி. இருந்தாலும் அவனின் உதவியால் நான் அதிக பணம் சம்பாதித்தேன்" என்ருர்.

இதைக்கேட்ட ஸிம்ஸன் சிறித்து "அவ்வளவு சம்பாதித்தும் அவனல் சொற்ப தொகை இழக்க இவருக்கு மனம் வரவில்லை" என்று தனக்குத்தானே சிந்தித்தார்.

ஸிம்ஸன் தனது ஆபீஸிற்கு போக, அங்கு பென்டனும் டாமும் முன்பே யிருப்பதைப் பார்த்தார். டாம் வருவதை ஸிம்ஸன் எதிர் பார்க்கவில்லை. இருந்தாலும் குலோரியாவைப் பார்ப்பதற்கு வேறு சாக்குபோக்கு சொல்லி வந்திருக்கலாமென்று நினைத்தார். ஆனல் குலோரியா அங்கு இல்லாததற்காக "மிஸ்டர் பென்டன் இன்று நமக் குள்ள வேலையில் அப்பெண்ணும் சம்பந்தப்படுவது நன்ருயில்லை யென்று அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்" என்ருர். பிறகு டாமைப்பார்த்து "நீங்களும் இன்றைய சமாச்சாரத்தை தெரிந்துதான் வந்திருக்கிறீர்களோ? என்று கேட்டார். "ஆம்" என்று டாம் சொன்னன்.

"தற்போது உங்களுடைய பிளான் எவ்வாறு?" என்று பென் டன் ஸிம்ஸனைக் கேட்டார்.

"இரத்தசின்ன சங்கத்தின் ஆள் வரும் நேரத்திற்கு சிலநிமிஷங் கள் முன், நான் எனது அறையினுள் நுழைகிறேன். நீங்கள் இந்த பக்கத்து அறையில் யிருந்துகொண்டு கதவை உங்கள் பக்கம் பூட்டிக் கொள்ளுங்கள். யாராவது வெளியிலிருந்து வந்தால் நான் இக்கதவை ஒருமுறை தட்டிவிட்டு போய் வெளிகதவை திறப்பேன். அப்பொழுது வெளியிலிருந்து யாரோ வந்திருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். அதிலிருந்து உஷாராயிருங்கள்" என்ருர்.

"சரிதான்" என்று பென்டன் சொல்லிக்கொண்டே ஜன்னலி னருகே போய் வெளியே பார்த்து தனது கைகுட்டையை ஆட்டினுர். அதைப்பார்த்த ஸிம்ஸன் சிறித்து, "நீங்களும் வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது. வெளியில் எத்தனை பேரை நிற்பாட்டியிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எண்பது பேர் என்று நினைக்கிறேன், இவ்வீட்டை அப்படியே சுற்றியிருக்கிருர்கள்" என்று பென்டன் சொன்னுர்.

ஸிம்ஸன் தலையை யசைத்துக்கொண்டே "இதையும் கவனியுங்கள். இரத்த சின்ன சங்கம் ஒரு சாதாரண ஆளை அனுப்பலாம். அப்படியிருந்தால் அவனிடமிருந்து பணம் பின்னால் இரத்த சின்ன சங்கத்தின் தலைவனைச் சேரும். ஆதலால் அவன் வந்து பணம் வாங்கிச் சென்றாலும் அவனறியாமல் அவனைப் பின் தொடரவேண்டும். அவ்வாறு சென்றால் தான் தலைவனைப் பிடிக்க முடியும்" என்றார்.

"நீங்கள் சொல்வது சரிதான். தலைவன் வரமாட்டான். எதற்கும் உங்கள் அறையை நான் நன்றாக பரிசோதிக்க வேண்டும்" என்று சொல்லி அறையைச் சுற்றி பார்த்தார். ஒரே ஒரு ஜன்னல் வழியாக வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் ஒரு பீரோயிருந்தது. அதைத் திறந்து பார்க்க ஒரே ஒரு கோட்டு தொங்கிக் கொண்டிருந்தது. பிறகு ஸிம்ஸன் பக்கம் திரும்பி "நீங்கள் தயவுசெய்து இவ்வறையை விட்டு வெளியில் போய் சிறிது நேரம் நின்றால், அதற்குள் நான் இவ்வறையை என் மனதிருப்திக்கு நன்றாக பரிசோதித்து விடுகிறேன்" என்றார். ஸிம்ஸன் சிறித்துக் கொண்டே அறையை விட்டு வெளிச் சென்றார். பென்டன் கதவை மூடிவிட்டார். சிறிது நேரத்திற்குப்பின் கதவைத் திறந்து "நீங்கள் உள் வரலாம். நான் மனத்திருப்தியாய் பார்த்துவிட்டேன்" என்றார். டாம் அங்கு மேஜைமேலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்துப் பார்த்தார் "உஷார்! அந்த துப்பாக்கியின் விரல் பிடி தொட்டமாத்திரத்தில் வெடிக்கும்" என்று ஸிம்ஸன் சொல்லவே டாம் அப்படியே வைத்துவிட்டான்.

ஸிம்ஸன் தனது ஜேபியிலிருந்து பண நோட்டுகள் உள்ள கவரையும் எடுத்து மேஜையின்பேரில் வைத்தார். பிறகு கடியாரத்தில் மணியைப் பார்த்தார். "நீங்கள் பக்கத்து அறைக்கு போகும் நேரம் வந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே வெளிக்கதவை மூடினார். பென்டனும் டாமும் பக்கத்து அறைக்கு போய் கதவை மூடிக்கொண்டனர். டாம் அங்கு ஒரு நாற்காலியில் உட்கார்ந்ததும், அது குலோரியா உட்காரும் நற்காலி என்றறிந்ததும் அவளைப்பற்றி நினைக்க ஆரம்பித்தான். "அவள் இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்திருப்பாளா? சீ! அவளுக்கும் இச்சங்கத்திற்கும் சம்பந்தமிராது" என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கும்போது, பென்டன் டாமைப் பார்த்து "நீ குலோரியாவைப் பற்றி நினைக்கிறாயா?" என்றார்.

“ஆம் மிக கெட்டவளாக தோன்றும் அவள் உண்மையில் கெட்டவளாகயிருப்பாளா? உங்கள் அபிப்பிராய மென்ன?” என்று கேட்டான்.

“அவள் கிரீன் வீட்டில் திருடியது உண்மையா யிருக்க, எனது அபிப்பிராயத்தைக் கேட்பானேன்?” என்று பென்டன் சொல்லும் போது, “நீங்கள் பேசாம லிருப்பது நலம்” என்று ஸிம்ஸனின் சப்தம் கேட்டது. இருவரும் பேசாம லிருந்தனர். ஸிம்ஸன் தனது அறையில் அங்கு மிங்கும் நடப்பதாக சப்தம் கேட்டது. பென்டன் தனது ஜேபியி லிருந்து கடியாரத்தை எடுத்து தனது முன்னுள்ள மேஜையின் மேல் வைத்தார். மணி 3-30 ஆக யிருந்தது. தற்போது பணத்திற் காக யாரும் வரக்கூடு மென்று, பென்டன் உஷாராக கூர்ந்து பக்கத்து அறை பக்கம் கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென்று, ஸிம்ஸன் தனது நாற்காலியில் தடாரென்ற சப்தத்துடன் உட்கார்ந்தவாறு கேட்டது. உடனே பென்டன் உட்கார்ந்திருந்த இடத்தை விட் டெழுந்தார் “அது என்ன சப்தம்?” என்று கேட்டார்.

“ஒன்று மில்லை. நான் தடுக்கி தவறினேன். பேசாதிருங்கள்” என்று ஸிம்ஸனின் சப்தம் கேட்டது.

சுமார் இன்னும் 5 நிமிஷ நேரம் உட்கார்ந் திருந்தனர். பிறகு பென்டன் “மிஸ்டர் ஸிம்ஸன்!” என்று சப்தமிட்டு கூப்பிட்டார். பதிலில்லை. மறு முறையும் கூப்பிட பதிலில்லை. உடனே பென்டன் தாமிதமின்றி கதவைத் திறந்து ஸிம்ஸனின் அறையினுள் நுழைந்தார். பின்னால் டாமும் வந்தான். அறையினுள் கண்ட காக்ஷி இருவரையும் பிரம்மிக்கச் செய்தது.

இரு கைகளையும் சேர்த்து விலங்கிடப்பட்டு, இரு கால்களும் கட்டப்பட்டு, முகத்திலும் ஒரு துவாலை கட்டப்பட்டவாறு தரையில் ஸ்மரணையற்று கிடந்தார் ஸிம்ஸன். அவருக்குப் பின்னிருந்த ஜன்னல் கதவு திறக்கப்பட்டிருந்தது. அறையினுள் மயக்க மருந்தின் வாசனை யிருந்தது. மேஜையின் மேலிருந்த பணம் காணவில்லை. சுமார் 3 வினடி பின்னர் அந்த கட்டிடத்தி லிருந்து வயது முதிர்ந்த ஒரு போஸ்ட்காரன், தபால் கடிதங்களுள்ள ஒரு பெரிய பையை தோளில் தூக்கியவாறு வெளிச் சென்றான். வெளியில் பாதுகாவலுக் கிருந்த போலீஸ்காரர்கள் தபால்காரனை சந்தேகமின்றி விட்டனர்.

(தொடரும்.)

# நாம் முன்னேற முடியும்!

(எருக்கலம்பிட்டி வி. பி. எம். அப்துல் ஜப்பார்)

அல்லாவினதும் அருமை நாயகம் (ஸல்) அவர்களினதும் அறிவுரைகளை அகத்தே யிருத்தி ஐங்காலத் தொழுகைகளை அவ்வப்போதே அதபுடன் அனுஷ்டித் தொழுகி வந்தால் நாம் முன்னேற முடியும்! இறைவனுக்கு இணைவைத்தலையும், இகவாழ்வின் இச்சைகளையும் இல்லாதகற்றி இரப்போருக்கு ஈந்துவரின் இஸ்லாமிய ஜோதி இகமெங்கும் துலங்க ஈருலகிலும் நாம் முன்னேற முடியும்! ஊதாரித்தனமான சில வினங்களை உதைத்துத் தள்ளிவிட்டு உயிருள்ளவரை உண்மையையே உரைத்து ஊண் உறக்கத்தின் உவகையைக் குறைத்து உலமாக்களின் உபதேசங்களை உதாசினம் செய்யாது மதித்து, உலகில் வாழ்ந்தால் உத்தம முத்தகீன்களாகிய நாம் முன்னேறமுடியும்! எதீம், ஏழை என்போரை ஏளனம் செய்யும் எத்தர்களையிட்டு ஏனோதானோ என்றிராது ஏக நாயனும் ஏந்தல் நபி (ஸல்) அவர்களும் எடுத்தியம்பியவற்றை எவ்வகையிலும் ஏற்று நடக்கச் செய்தால் என்றென்றும் நாம் முன்னேற முடியும்! ஒற்றுமை ஒன்றேவெற்றிக்கறிகுறி என்னும் மணி ஓசை ஓயாது ஒலிக்கச் செய்து ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று ஆணவத்தால் ஓலமிட்டு ஈற்றில் ஓட்டாண்டியாகும் குணத்தை ஓங்காரமெனக்கொண்டு ஓட்டிவிட்டால் நாம் ஓர்மையுடன் முன்னேறமுடியும்! கலிமாப்பொருளுணர்ந்து காரியமாற்றி கூடுமானல் ஹஜ்ஜு என்னும் கடமையையும் நிறைவேற்றி, களங்கமும் கறையுமில்லா கல்விகளைக் கவனமுடன் கற்று, காரிகைகள் கற்புடன் நடந்து கல்லானலும் கணவன் எனப்போற்றி களவு, கள், கபடம், கோபம், கோள் ஆகியவற்றை அகற்றி வெற்றிமாலை சூடுவோமானல் கபுறில் கடுமையான கேள்வி கணக்கால் கலங்கி நில்லாது, காலகெதியில் நாம் முன்றேமுடியும்! சன்மார்க்கத்தின் சொல்லுபதேசத்தை செவியேற்று, சாதனைபுரியும் போழ்து, சோதனை தொடர்ந்தால் சலிப்பும் சோர்வுமுறுது, சகிப்புடனும் சந்தோஷத்துடனும் சாதித்து சினு வென்னும் கோர அரக்கனுக்கு சாவுமணி அடித்து சதி செய்தலைக் குழிதோண்டிப்புதைத்து சுன்னத்தான கைங்கரியங்களைச் சரிவரச் செய்து ஷெய்த்தானின் சூழ்வலையில் சிக்கிவிடாது சகோதரர்களின் சேம நலன் விசாரித்து ஆவன செய்து

வந்தால் சிருத்துல் முஸ்தகீம் என்னும் பாலத்தை சங்கையுடன் கடக்க சக்திபெற்று நாம் முன்னேற முடியும்!

பண்டைய நம் சமூகத்தினரது பண்பாட்டையும் புகழையும் பாராட்டிப் பேசி பல்லவி பாடுதலுடனில்லாது பகுத்தறிவைப் பயன் படுத்தி "பத்ஹுல் இஸ்லாத்தின்" பொன்னான போதனைகளைப் பின் பற்றி பணியாற்றின் பிற்போக் கென்னும் பெருச்சாளிப் பிடியிலிருந்து பிரிந்து நாம் முன்னேற முடியும்! திருமறைத் திருமொழிப்படி திடமுடன் நடந்து தேடிய திரவியத்தைத் தகுந்த முறையில் சிலவு செய்வதையே திருப்தியாகக்கொண்டு தோட்டிமுதல் தொண்டமான் வரை யாவரும் சமம் என்பதைத் துலாம்பரமாக்கி தீண்டாமையைத் தொலைத்துவிட்டால் திட்டமாக நாம் முன்னேற முடியும்!

மாதா பிதா மனம் வருந்தின் மைந்தருக்கு மோட்சமில்லையென்று மஹ்மூது நபி (ஸல்) அவர்களின் மொழி உபதேசப்படி ஒழுகி மார்க்காதார மற்றதும் மார்க்க முரணானதுமான கிரியைகளைப் புரியும் மடமைக்கு முற்றுப்புள்ளி வைத்து மேலாயுள்ள வாசகங்களை மீண்டும் மனனம் செய்து முற்போக்கு மனப்பான்மையுடன் நடந்தால் முஸ்லிம்களாகிய நாம் முன்னேற முடியும்!

விபசாரம், வம்பு செய்தல், வஞ்சந்தீர்த்தல் வட்டி வாங்கல் ஆகியவற்றை விலக்கி வியாபாரத்தில் நீதியைக்கடைப்பிடித்து வையக வினோதங்களில் வாழ்நாளைப்போக்கி விட்டின் பறவையின் விபரீத நிலைபோலாகாது விரண்டாவாத வழியைப் பின் தொடாது விளிப்புடன் நடந்தால் விவேகமுடன் நாம் முன்னேற முடியும்!

வல்லோனருளால் நாம் முன்னேற முடியும்!! வைய மக்களெல்லாம் வாழ்த்தி புகழ நாம் முன்னேற முடியும்!!! வஸ்ஸலாம்.

182040

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

ஸீரத்துல் குப்ரு வென்னும்

# ஜா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரமானது எஜமானியாக எற்று பின்பற்றத்தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய நபி பெருமாட்டியின் ஜீவவிருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம்சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர்; அன்றியும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும் பிரதமமானவர் என்ற பெருமை அவருக்கு வாய்ந்திருந்தது. அவரது வாழ்க்கை சம்மந்தமான இந்த சரித்திரம் அனைவரும் படித்து அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

இதில் கதிஜா நாயகியின் வமிச பரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், ரஸூல் நாயகம் (ஸல்) ஷாம், மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானுருக்கும் திருக்கலியாணம் முடிந்ததும், கதீஜா பெருமாட்டி தமது உரிமையைக் கணவருக்கு அர்பணஞ் செய்ததும், நபி பெருமானுருக்கு வஹி இறங்குதல், நபி பட்டந் தரித்தல், நபிகள் பெருமானுருக்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. இச்சரிதையில் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—4—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2—2—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# காலி கோரி கில்லா.

(கருத்தவள் சிவத்தவள் இருவரின் தர்க்க வரலாறு)

எல்லாம் வல்ல ஆண்டவனின் சிரு மானிட வர்க்கத்திலும் ஏனைய வர்க்கத யாக இருப்பதை நாம் காண்கிறோம். பெண்ணை படைத்திருப்பது போன்று, கறுப்புக்கு எதிர வெள்ளையை உண்டாக்கி யிருக்கிறான். ஆனால் நாயன் எதை எந்த அமைப்பிலும் நிறத்திலும் படைத்திருக்கிறானோ அதில் நாம் அற்ப சொற்ப குறையேனும் கூற முற்படுவோமாகில் அது நம்முடைய அறியாமை, மதியீனத்தையே வெளிப் படுத்துவதாகும். இச்சிறு புத்தகத்திலுள்ள கதை அதற்கு சான்றாகும். இந்த கதை இரு ஸ்திரீகளைப் பற்றியதாகும். ஆதலால் இதை ஆடவர்கள் பொதுவாயும் ஸ்திரீகள் குறிப் பாகவும் படித்தறிய வேண்டியது அத்தியாவசியமாகும்.

இதன் விலை அணா. 4

# ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை.

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களை சந்தித்ததும், இருவர்களுக்கு முள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விபரிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

விலை அணா. 10

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.